(2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைத் துணைத் தலைவர் தம் பதவியை ராசினாமா செய்வாரா என்பது குறித்து

THIRU B. VENKATASWAMI : On a point of order Sir. The hon. Deputy Speaker, when he was in office, has already stated something that has appeared in the papers. With the permission of the Chair, I shall read what has appeared in the papers.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்பதைச் சொன்னால் போதும்.

THIRU B. VENKATASWAMY : He had said that if a no-confidence motion has been brought against him by any member of the House, he would himself get away before the motion is taken up. To save the time of the House, may I know whether the Deputy Speaker would vacate the office, as had been already told by him. That is what I want to know from the Deputy Speaker.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, நம்முடைய சுதந்திராக்கட்சி நண்பர் நேரத்தை மிச்சப்படுத்த வேண்டுமென்று அவருடைய கருத்தைச் சொன்னார். நான் பேரவையில் அப்போதே சொல்லியிருக்கிறேன். இந்தப் பதவியிலிருந்து 4-ந் தேதியே ஒரு அறிக்கை கொடுத்துவிட்டு, இராஜிநாமா செய்துவிடலாம் என்று இருந்தேன். ஆனால் கட்சியிலிருந்து விலகிய உடனேயே போட்டா போட்டி போட்டுக்கொண்டு, மைனாரிட்டி கட்சி, மெஜாரிட்டி கட்சி, பதவியிலிருந்து தூக்கி எறிந்துவிடுவோம் என்றெல்லாம் சொல்லி, சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பான செய்திகள் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. அந்தக் கருத்துக்களுக்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்வதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். நான் சொன்னது, நம்முடைய அண்ணன் மதி அவர்கள்—மன்னிக்கவேண்டும் அவர்கள்—செய்தது போல் செய்ய மாட்டேன் என்று. நண்பர் வெங்கடசாமி அவர்கள் வருத்தப்படக் கூடாது. சபையின் நேரத்தை மிச்சப்படுத்துவது என்றால், சுதந்திராக் கட்சி இப்படி இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பதைவிட அந்தக் கட்சியைக் கலைத்துவிட்டு ஆளும் கட்சியில் சேர்ந்துவிடலாம்.